# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப., (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

******

**ஆணை எண்: 61 /பேரூ/2025**
**நாள் : 12.05.2025**

திரு. M. விஜயன்,
பொன்னேரி,
திருவள்ளூர் மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
ஆரணி பேரூராட்சி,
திருவள்ளூர் மாவட்டம். – எதிர் மனுதாரர்

திருவள்ளூர் மாவட்டம், ஆரணி, கதவு எண். 63, S.P. கோவில் தெரு என்ற முகவரியை சேர்ந்த திரு. M. விஜயன் என்பவரது 31.01.2025 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 03.02.2025 அன்று பெறப்பட்டு, 61/பேரூ/2025 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

திருவள்ளூர் மாவட்டம், ஆரணி, கதவு எண். 63, S.P. கோவில் தெரு என்ற முகவரியை சேர்ந்த மனுதாரர் திரு. M. விஜயன் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு தனது 31.01.2025 நாளிட்ட புகார் மனுவில் கீழ்க்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்:

“ஐயா நான் மேற்கண்ட விலாசத்தில் வசிக்கிறேன். திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள ஆரணி பேரூராட்சி அலுவலகத்தில் செயல் அலுவலர் அவர்களின் அறையை சீரமைக்க ரூ.3,60,000 மதிப்பீட்டில் பணிகளை செய்து முடித்து சுமார் 2 வருடங்கள் கடந்து விட்ட நிலையில் எனக்கான காசோலைகள் இதுநாள் வரையில் வழங்கவில்லை. நானும் பலமுறை செயல் அலுவலர் அவர்களை சந்தித்து எனக்கு வழங்க வேண்டிய தொகையினை கேட்டதற்கு அறையை சீரமைக்கும் பணியானது முன்பு இருந்த செயல் அலுவலரின் வழிகாட்டுதலின் பெயரில் செய்யப்பட்டது. எனவே அந்த பணிக்கான தொகையினை நான் வழங்கமாட்டேன் என்று திட்டவட்டமாக தெரிவித்துவிட்டார். நான் நடுத்தர குடும்பத்தை சார்ந்தவன். எனக்கு இந்த தொகையானது மிகவும் பெரிய அளவிலான தொகையாகும். என்னுடைய சிரமத்தை

புரிந்துகொண்டு எனக்கான தொகையை பெற்றுத்தர வேண்டுமென்று பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

2. முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 05.03.2025 நாளிட்ட அறிவிப்பின் மூலம் ஆரணி பேரூராட்சி செயல் அலுவலரிடம் கோரப்பட்டது.

3. ஆரணி பேரூராட்சி செயல் அலுவலர் தனது 15.04.2025 நாளிட்ட அறிக்கையில் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்.

ஆரணி பேரூராட்சியின் தலைவர் அறையை புனரமைப்பு பணி மேற்கொள்ள 2021-22 ஆம் நிதியாண்டில் பொதுநிதியில் பணிகள் மேற்கொள்ள திட்டமிடப்பட்டு, ரூ.3,60,000/- மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, அதனை தொடர்ந்து ஒப்பந்தபுள்ளிகள் கோரப்பட்டு பணி செய்து முடிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில் அப்போதைய செயல் அலுவலர் திரு. ச. கலாதரன் என்பவரால் மேற்கொள்ளப்பட்ட செலவினங்கள் குறித்து தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் ஆரணி பேரூராட்சியின் துணைத் தலைவர் திரு. க. சுகுமார் என்பவரால் தொடரப்பட்ட வழக்கு எண்.359/பேரூ./2023 என எண்ணிடப்பட்டு வழக்கு நடைபெற்று, இறுதியாக 23.12.2023 ஆம் நாளில் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தால் தீர்ப்புரை அளிக்கப்பட்டுள்ளது. இத்தீர்ப்புரையில் ஆரணி பேரூராட்சியின் பொது நிதியில் நடந்த முறைகேடுகள் தொடர்பாக மட்டுமல்லாமல், பேரூராட்சியில் நடைபெற்ற அனைத்து பணிகள் தொடர்பான கோப்புகளை முழுமையாக ஆய்வு செய்து அந்த அறிக்கை பேரூராட்சிகள் இயக்குநருக்கு அனுப்பி வைக்க உள்ளாட்சி நிதி தணிக்கைத் துறை இயக்குநருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும் நிதி தணிக்கை அறிக்கையில் முறைகேடுகள் நடந்திருக்கும் என தெரிய வருமேயானால் சம்பந்தப்பட்ட அனைத்து அலுவலர்கள் மீதும் பேரூராட்சிகளின் இயக்குநர் அவர்கள் உரிய ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளவும் பரிந்துரை செய்து அவ்வாறே முறைமன்றம் ஆணையிட்டுள்ளது.

மேற்படி முறைமன்றம் உத்தரவின்படி உள்ளாட்சி நிதி தணிக்கை துறையால் தணிக்கை மேற்கொள்ளப்பட்டு தொடர் நடவடிக்கையில் இருந்து உள்ளதால் ஆகஸ்ட், 2024 வரை பணியில் இருந்த செயல் அலுவலர்கள் அப்பட்டியல் தொகையை திரு. எம். விஜயன், ஒப்பந்ததாரருக்கு வழங்க நடவடிக்கை எடுக்காமல் இருந்துள்ளனர்.

எனவே மேற்கண்டுள்ள முறைமன்ற வழக்கின் தீர்ப்பினை கருத்தில் கொண்டு துறை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதால், திரு. எம். விஜயன், என்பவரால் புகார் மனுவில் தெரிவித்துள்ள பட்டியல் தொகை ரூ.3,60,000/- வழங்க இயலவில்லை என்ற அறிக்கையை உள்ளாட்சிகள் முறைமன்ற நடுவத்திற்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது" என தெரிவித்துள்ளார்.

4. மனுதாரரும் மற்றும் எதிர்மனுதாரரான ஆரணி பேரூராட்சி செயல் அலுவலரும் 15.04.2025 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 07.04.2025 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர் திரு. M. விஜயன் என்பவர் 15.04.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை அளித்துள்ளார்:

- ஒப்பந்ததாரராகிய நான், 2022–23 ஆம் ஆண்டில், திருவள்ளூர் மாவட்டம், ஆரணி பேரூராட்சி அலுவலகத்திலுள்ள பேரூராட்சி செயல் அலுவலரின் அறையினை ரூ.3.60 இலட்சம் மதிப்பீட்டில் சீரமைப்பு செய்து முடித்த பணிக்கு, கடந்த 2 வருடங்களாக பேரூராட்சியால் எனக்கு ஒப்பளிப்புத் தொகை வழங்கப்படவில்லை என தெரிவித்துக் கொள்கிறேன்.
- மேற்படி தொகையினை வழங்கக் கோரி தற்போதைய பேரூராட்சி செயல் அலுவலரிடம் அணுகிய போது, அறை சீரமைப்பு பணியானது முன்னாள் செயல் அலுவலரின் வழிகாட்டுதலின் பேரில் மேற்கொண்டதால், அவரால் ஒப்பளிப்பு வழங்க இயலாது என தெரிவித்து வருகிறார்.
- நான் நடுத்தர குடும்பத்தைச் சார்ந்தவன் என்பதால், எனது குடும்ப சூழ்நிலை கருத்தில் கொண்டு, நான் செய்த மேற்கண்ட பணிக்கு வழங்க வேண்டிய ரூ.3.60 இலட்சம் தொகையினை பேரூராட்சியிடமிருந்து எனக்கு ஒப்பளிப்பு செய்ய ஆவன செய்யுமாறு இம்முறைமன்ற நடுவத்தை மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

6. எதிர்மனுதாரரான ஆரணி பேரூராட்சி செயல் அலுவலர் திரு. அ. அபுபக்கர் என்பவர் 15.04.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை அளித்துள்ளார்:

- மனுதாரர் திரு M. விஜயன் என்பவர் கோரியுள்ள ரூ.3.60 இலட்சம் மதிப்பீட்டிலான ஆரணி பேரூராட்சி மன்றத் தலைவர் அறையினை புனரமைப்பு செய்த பணியானது 2023 ஆம் ஆண்டிற்கு முன்னர் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

- இதற்கிடையில், ஆரணியை சார்ந்த திரு. க. சுகுமார் என்பவர் 14.11.2023 நாளிட்ட முறையீட்டு மனு மூலம் இம்முறைமன்ற நடுவத்தில் அளிக்கப்பட்ட புகாரில், ஆரணி பேரூராட்சியில் பல்வேறு பணிகள் மேற்கொண்டதில் முறைகேடுகள் நடந்துள்ளன எனவும், இவற்றில் ஒன்றான ஆரணி பேரூராட்சி மன்றத் தலைவரின் அறையை ரூ.3.60 இலட்சம் மதிப்பில் புதுப்பித்ததில் கையாடல் செய்துள்ளனர் என சமர்ப்பிக்கப்பட்ட மனுவினை, இம்முறைமன்ற நடுவம் விசாரணை செய்து, ஆணை எண்.359/பேரூ./2023 நாள் 23.12.2023–ல் ஆரணி பேரூராட்சியில் நடைபெற்ற அனைத்துப் பணிகள் தொடர்பான கோப்புகளை உள்ளாட்சி நிதித் தணிக்கை துறை மூலம் ஆய்வு செய்து, அதன் அறிக்கையின் அடிப்படையில் முறைகேடுகள் நடந்திருப்பின், சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மீது துறை ரீதியான நடவடிக்கை மேற்கொள்ள பரிந்துரை செய்யப்பட்டு ஆணை வெளியிடப்பட்டது.

மேற்கண்ட இம்முறைமன்ற நடுவர் ஆணையின்படி, உள்ளாட்சி நிதித் தணிக்கை துறையால் தணிக்கை மேற்கொள்ளப்பட்டு தொடர் நடவடிக்கையில் உள்ளது. உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையின் அறிக்கை இந்நாள்வரை பேரூராட்சியில் பெறப்படவில்லை. எனவே, மனுதாரருக்கு ரூ.3.60 இலட்சம் தொகையினை வழங்க இயலவில்லை. இந்நிலையில், அவ்வறிக்கை பெறப்பட்டவுடன், அதன் அடிப்படையில் மனுதாரருக்கு வழங்கப்பட வேண்டிய தொகையினை குறித்து உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை ழுங்கஇம்முறை மன்ற நடுவத்தில் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

7. மனுதாரரின் புகார் மனு, அவரது வாக்குமூலம் மற்றும் எதிர்மனுதாரரான ஆரணி பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கை மற்றும் அவரது வாக்குமூலம் ஆகியவை தொடர்புடைய ஆவணங்களுடன் இம்முறை மன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது.

திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி என்ற இடத்தைச் சார்ந்த மனுதாரர் திரு. M. விஜயன் என்பவர் தனது **31.01.2025** நாளிட்ட முறையீட்டு மனுவில், திருவள்ளூர் மாவட்டம், ஆரணி பேரூராட்சி அலுவலகத்திலுள்ள பேரூராட்சி செயல் அலுவலரின் அறையினை ரூ.3,60,000 செலவினத்தில் சீரமைப்பு செய்து முடித்த பணிக்கு, 2 வருடங்களாக பேரூராட்சியால் ஒப்பளிப்பு செய்யப்படாமல் காலதாமதம் செய்து வருவதாக புகாராக தெரிவித்து, இத்தொகையினை ஒப்பளிப்பு செய்வதற்கு ஆவன செய்யுமாறு இம்முறைமன்ற நடுவத்தை கோரியுள்ளார்.

2021-22 ஆம் ஆண்டில் ஆரணி பேரூராட்சி அலுவலகத்திலுள்ள பேரூராட்சி மன்ற தலைவர் அறையை பேரூராட்சியின் பொது நிதியிலிருந்து புனரமைப்பு மேற்கொள்ள திட்டமிடப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி மூலம் மனுதாரர் திரு. M. விஜயன் என்பவரால் ரூ.3,60,000 மதிப்பீட்டில் சீரமைப்பு பணி செய்து முடிக்கப்பட்டுள்ளதை பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கை மூலம் தெரிய வருகிறது.

இதற்கிடையில், திருவள்ளூர் மாவட்டம் ஆரணியைச் சார்ந்த திரு. க. சுகுமார் என்பவர் தனது **14.11.2023** நாளிட்ட முறையீட்டு மனுவில் ஆரணி பேரூராட்சி மன்ற தலைவரும் மற்றும் பேரூராட்சி செயல் அலுவலரும் சேர்ந்து, **2022-23** ஆண்டில் பொது நிதியில் மேற்கொள்ளப்பட்ட செலவினங்களில் கையாடல் செய்து முறைகேடு செய்துள்ளதாகவும் மற்றும் பல்வேறு புகார்கள் தெரிவித்து இருந்தார். இப்புகாரில் ஆரணி பேரூராட்சி மன்ற தலைவரின் அறையினை ரூ.**3.60** இலட்சம் மதிப்பில் புதுப்பித்ததாக கணக்கு காட்டி கையாடல் செய்ய முயற்சிக்கின்றனர் என தெரிவித்திருந்தது ஒன்றாகும். திரு. க. சுகுமார் சமர்ப்பித்த புகார் மனுவினை இம்முறைமன்ற நடுவம் விசாரணை மேற்கொண்டு, **23.12.2023** நாளிட்ட ஆணை எண்.359/பேரூ./2023ல் ஆரணி பேரூராட்சியில் பொதுநிதி முறைகேடுகள் தொடர்பாக மட்டும் அல்லாமல் அந்த பேரூராட்சியில் நடைபெற்ற அனைத்துப் பணிகள் தொடர்பான கோப்புகளை முழுமையாக ஆய்வு செய்து அதன் அறிக்கையினை 3 மாதத்திற்குள் பேரூராட்சிகளின் இயக்குநருக்கு அனுப்பி வைக்குமாறு உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை இயக்குநருக்கு அறிவுறுத்தி ஆணை வெளியிடப்பட்டது.

மேற்காணும் இம்முறைமன்ற நடுவ ஆணைப்படி ஆரணி பேரூராட்சியில் மனுதாரர் ஒப்பளிப்பு கோரும் தொகை உள்ளடக்கிய **2022-23** ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட செலவினங்கள் தொடர்பாக உள்ளாட்சி நிதித் தணிக்கை துறையால் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, தொடர் நடவடிக்கையில் உள்ள நிலையில் தணிக்கைத் துறையின் அறிக்கை இந்நாள்வரை பெறப்படவில்லை என்பதால் மனுதாரர் ஒப்பளிப்பு கோரும் பட்டியல் தொகையான ரூ.3,60,000 வழங்க இயலவில்லை என்பதை பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கை மற்றும் அவரது வாக்குமூலம் வாயிலாக தெரிய வருகிறது.

இந்நிலையில், **2022-23** ஆம் ஆண்டில் ஆரணி பேரூராட்சியில் மேற்கொள்ளப்பட்ட செலவினங்கள் குறித்து, உள்ளாட்சி நிதித் தணிக்கை துறையால் மேற்கொள்ளப்பட்டுள்ள தணிக்கையை துரிதமாக நிறைவு செய்து அதன் அறிக்கையை சமர்ப்பிக்க உரிய அறிவுரைகள் வழங்குமாறு உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை இயக்குநரை அறிவுறுத்தலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

மேலும், தணிக்கைத் துறையின் அறிக்கையினை பெற்று அதன் அடிப்படையில் மனுதாரர் ஒப்பளிப்பு கோரும் தொகையான ரூ.3,60,000-ஐ வழங்குவது குறித்து விதிமுறைகளுக்கு உட்பட்டு உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு ஆரணி பேரூராட்சி செயல் அலுவலரை அறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2025-ஆம் ஆண்டு மே திங்கள் 12-ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சிஅமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு. M. விஜயன்,
த/பெ. முனுசாமி,
63, S.P. கோவில் தெரு,
ஆரணி,
திருவள்ளூர் மாவட்டம் - 601 101.
2) செயல் அலுவலர்,
ஆரணி பேரூராட்சி,
திருவள்ளூர் மாவட்டம்.
3) இயக்குநர்,
உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை,
571, அண்ணா சாலை, நந்தனம், சென்னை–600 035.
4) பேரூராட்சிகளின் ஆணையர்,
பேரூராட்சிகளின் ஆணையரகம்,
இராஜா அண்ணாமலைபுரம்,
எம். ஆர்.சி நகர், சென்னை–600 028.
5) இணை இயக்குநர் / ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer).
(பெயரிட்ட உறையில்)
பேரூராட்சிகளின் ஆணையரகம்,
இராஜா அண்ணாமலைபுரம், எம். ஆர்.சி நகர், சென்னை–600 028.

<u>நகல்</u>

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.

~~இகோ~~/உதிரிகள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

14/5/25

செயலாளர்

14/5/25

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம், சென்னை–600 032